# சிங்கக்குட்டி!

413



தங்கமணி

குழந்தை வெளியீடு 16

★

விலை 2 அணா

★

குழந்தைப் பதிப்பகம்
4, ரட்லண்ட் கேட் காலனி
:: சென்னை - 6 ::


சிங்கக்குட்டி!
"தங்கமணி"

# சிங்கக்குட்டி!



நீலவானத்தில் மலை மலையாகக் குவிந்து கிடக்கும் மேகங்களுக்குள்ளே, புகுந்து புகுந்து ஓடுவதைப் போல ஜாலவித்தை காட்டிக் கொண்டிருந்தான், பூரணச் சந்திரன்.

நீலவானத்தில் வைரக் கற்களை வாரிவாரி இறைத்ததைப்போல அங்குமிங்குமாகச் சிதறிக் கிடக்கும் நட்சத்திரங்கள் 'பளிச்பளிச்' என்று ஒளி வீசிக் கொண்டிருந்தன.

நீலவானத்தில் ஜொலிக்கும் பூரணச் சந்திரனின் பால் போன்ற குளிர் வெளிச்சத்தில், 'சுந்தரம் சர்க்கஸ் கம்பெனி'யின், வெள்ளைவெளே



றென்ற கூடாரங்கள், திட்டுத் திட்டாக வெள்ளிக் குன்றுகளைப் போலத் தோற்றமளித்தன.

அப்போது, இரவு மணி பத்து!

அந்த சர்க்கஸ் கம்பெனிக் கூடாரங்கள் ஒன்றில், கயிற்றுக் கட்டிலின்மீது, தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான், பாலு.

அவன் உள்ளத்தில் என்னவோ ஒரு விஷயம் புகுந்துகொண்டு, அவனை வாட்டி வதக்கிக் கொண்டிருந்தது.

அப்போது பக்கத்துக் கூடாரத்தில் யாரோ இருவர் பேசும்குரல் இலேசாகக் கேட்டது. உடனே பாலு, காதை நன்ருகத் தீட்டிக்கொண்டு, கூடாரத்திலிருந்து வரும் பேச்சை, கவனமாக உற்றுக் கேட்க ஆரம்பித்தான்.

"ஏனய்யா, மானேஜர்வாள்! நம்ப ராஜா எப்போ வருவான்னு தெரியலையே! அப்பா, அம்மாவைப் பார்த்துவிட்டு வரேன்னு பத்து நாள் லீவிலே போனவன், பதினேரு நாளாகியும் இன்னும் வரக்காணுமே! உம்"

"சார்! தயவுசெய்து மன்னிக்கணும்."

"மன்னிக்கணுமா! ஏய்யா?"

"நம்ப ராஜா, காலையிலே நாலு மணிக்கு வார போட் மெயிலிலே வாரேன்னு, நேத்துக் காலையிலேயே தந்தி அனுப்பிச்சு இருந்தான், சார். அதை உங்களிடத்திலே அப்பவே சொல்லலாம்னுதான் இருந்தேன். ம்—ம்—ம்—"

"சொல்லலாம்னுதான் இருந்தீங்க. ஆனா, மறந்துப்பிட்டீங்க! அப்படித்தானே! நல்லா இருக்குதே, நீங்க வேலை பார்க்கிற அழகு! சரி, நீங்க, நாளைக்குக் காலையிலே நாலு மணிக்கெல்லாம் காரை எடுத்துக்கிட்டு ஸ்டேஷனுக்குப்போய் ராஜாவை அழைச்சுக்கிட்டு வாங்க. அவன் ஒருத்தன் இல்லாமே கம்பெனியே சூன்யமா இருக்குது. நல்ல வசூலும் ஆகல்லே. ரொம்ப மோசமாப் போயிடுத்து......"

அவ்வளவுதான். அவர்கள் பேச்சு அதோடு முடிந்தது.

இவை யாவையும் கேட்டுக் கொண்டிருந்த பாலு, பக்கத்துக் கூடாரத்தில், பேசியவர்கள் கம்பெனி முதலாளியும், மானேஜரும்தான் என்பதை அவர்கள் பேச்சுக் குரலிலிருந்தே தெரிந்து கொண்டான்.

அவர்கள் பேசியதை எல்லாம் நினைக்க, நினைக்க பாலுவிற்கு அடக்கமுடியாத ஆத்திர

மும், கோபமும் பொங்கிக்கொண்டு வந்தன. அவன் உள்ளத்தில் ஆறுமாத காலமாக உள்ளுக்குள்ளேயே புகைந்து கொண்டிருந்த பொறாமைத் தீ, திடீரென்று கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது!

பாலு, 'விருட்'டென்று கட்டிலை விட்டு எழுந்தான்.

கூடாரத்திற்குள்ளேயே அப்படியும் இப்படியுமாகக் கையைப் பிசைந்து கொண்டு உலாவினான். அவனுடைய கண்கள் 'டேஞ்சர் லைட்' மாதிரி சிவந்து போய்விட்டன.

"ஹூம்! நேற்று வந்த கத்துக்குட்டிப் பயல்மீது எவ்வளவு அன்பு! எவ்வளவு ஆசை! அவனுக்காக எவ்வளவு அக்கரை! அவன் வரப்போகிறானா? வரட்டும்!" என்று, உள்ளுக்குள்ளேயே குமுறினான். மறுபடியும் கட்டிலின் மீது வந்து 'தொப்' என்று உட்கார்ந்தான். போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்தான். கண்களை வெறுமனே மூடிக் கொண்டு ரொம்பத் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான். யோசித்துக் கொண்டே இருந்தான்.

* * *

பாலுவிற்குச் சுமார் இருபது வயதிருக்கும். அவன், அந்த சர்க்கஸ் கம்பெனிக்கு ஐந்து

வருடங்களுக்கு முன்னே, பதினைந்து ரூபாய் சம்பளத்தில் வந்து சேர்ந்தான். இப்போது, அவனுக்குச் சம்பளம் எண்பது ரூபாய். முத லாளி, ஒரு காலத்தில் பாலுவின் மீது பிரிய மாகத்தான் இருந்தார். ஆனால், அந்தப் பிரிய மெல்லாம் இப்போது கிடையாது! இதற்குக் காரணம் பாலுவின் சோம்பேறித்தனமும், கர்வமும்தான்!

அடிக்கடி காட்சி நேரங்களில் நேரங் கழித்து வருவது, கம்பெனித் தொழிலாளர் களை மதிக்காமல் இருப்பது, அடிக்கடி லீவு எடுத்துக் கொண்டு ஊரைச் சுற்றுவது, வித்தை களைக் காட்டும் பொழுது ஆர்வத்தோடு காட் டாமல் அலட்சியத்தோடு காட்டுவது, மானேஜ ரிடம் அடிக்கடி சண்டை போடுவது—இப்படி இருந்தால் யாருக்குத்தான் பாலுவின் மீது பிரியம் இருக்கும்? ஆகவே, அவன் மீதிருந்த அன்பெல்லாம், இப்போது, முதலாளிக்கு ராஜாவின் மீது திரும்பிவிட்டது. அவர் ராஜாவின் மீது தம் உயிரையே வைத்திருந் தார்; வைத்திருக்கிறார்.

ராஜா, ராஜா மாதிரி அழகாக இருப் பான். ரொம்ப நல்ல பையன். அவனுக்குப் பதினைந்து வயசுதான் இருக்கும். ஆனால்,

அவன் பார்ப்பதற்குப் பதினெட்டு வயசுப் பையனைப் போல் இருப்பான். அவன் அந்த சர்க்கஸ் கம்பெனிக்கு மூன்று வருஷங்களுக்கு முன்னே தான் வந்து சேர்ந்தான்.

ராஜா, அந்தக் கம்பெனிக்கு வந்த ஆறு மாதத்திற்குள், சர்க்கஸ் நிபுணர் கற்றுக் கொடுத்த வித்தைகளை யெல்லாம் ஆசையோடும், ஆர்வத்தோடும், நன்ருகக் கற்றுக் கொண்டான். சர்க்கஸ் கம்பெனி முகாம் போடும் ஊர்களிலெல்லாம் தான் கற்ற வித்தைகளை அற்புதமாகவும் ஆச்சரியப்படும்படியாகவும் செய்து காட்டி ஒரு வருஷத்திற்குள் நல்ல புகழைச் சம்பாதித்து விட்டான்! ராஜாவின் புகழ் ஊரெங்கும் பரவியது. அவனுல் அந்த சர்க்கஸ் கம்பெனிக்கு நல்ல புகழும், அபாரமான வசூலும் கிடைத்தன. முதலாளியின் உள்ளம் 'குளுகுளு' என்று ஆனந்தத்தால் குளிர்ந்து விட்டது. அல்லி மலர்களுக்கு நடுவே விளங்கும் செந்தாமரை மலர் போல, ராஜா, சர்க்கஸ் கம்பெனித் தொழிலாளர்களுக்கு நடுவே, நடுநாயகமாக விளங்கிஞன். இப்போது, ராஜாவுக்குச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? நூறு ரூபாய்! பாலுவின் சம்பளத்தை விட இருபது ரூபாய் அதிகம்!

இதை யெல்லாம் நினைக்க நினைக்க பானு வுக்கு ஈட்டியால் 'சதக், சதக்' என்று குத்து வதைப் போன்ற வேதனை உண்டாயிற்று.

"நேற்று வந்த எலி பிடிக்கத் தெரியாத பூனைக்குட்டிக்கு நூறு ரூபாய் சம்பளம்! ஆறு வருஷமாக இந்த சர்க்கஸ் கம்பெனியில் மாடாய் உழைத்து வரும் எனக்கு எண்பது ரூபாய் சம்பளம்! என்ன அநியாயம்! என்ன அக்ரமம்! என்னை விட, அந்தச் சுண்டைக்காய்ப் பயல் எதிலே உயர்ந்துவிட்டான்? என்ன ஆனாலும் சரிதான்! அந்த ராஜாப் பயல் இந்தக் கம்பெனியில் இருக்கும் வரைக்கும், நமக்கு இங்கே மதிப்பும் இருக்காது; மானமும் இருக் காது! அந்தப் பயலை எப்படியாவது..........." என்று, எத்தனையோ நாள், எத்தனையோ தட வை, ராஜாவின் செல்வாக்கை நினைத்து நினைத்து நெஞ்சம் குமுறி இருக்கிறான், பானு.

பானுவின் பொறாமை நன்றாக வேரூன்றி துளிர்விட்டுத் தழைத்து, நாளுக்குநாள் அணு அணுவாக வளர்ந்து, கொஞ்ச நாட்களுக்குள் பெரிய்...ய மரமாகவே ஓங்கி வளர்ந்துவிட் டது!

பானு, ராஜாவை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்காக எத்தனையோ தந்திரங்களைக்

கையாண்டான். எவ்வளவோ தீய வழிகளில் கண்ணை மூடிக்கொண்டு இறங்கினன். ஒரு வகையிலும் அவன் வஞ்சம் தீர்ந்தபாடில்லை?

* * *

சுமார், ஒரு வருஷத்திற்கு முன்னே. அப்போது, சர்க்கஸ் கம்பெனி, கற்பனையூரில் முகாம் போட்டிருந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் எல்லா வகுப்பு டிக்கட்டுகளும் கொஞ்ச நேரத்திற்குள் தீர்ந்துபோய் விட்டன.

கொட்டகைக்குள் ஏராளமான கூட்டம். எள் விழுவதற்குக் கூட இடமில்லை.

"டடாங்! டடாங்! டடாங்!" என்று, மணி யடித்தது. காட்சி ஆரம்பமாயிற்று.

முதன் முதல் ஒரு கோமாளி வேஷக்காரன் மேடையில் தோன்றி பல தமாஷ் வித்தைகளைச் செய்து காட்டி, மகாஜனங்களை வயிறு புடைக்கச் சிரிக்க வைத்தான். பிறகு, ஒரு குட்டித் தம்பி ஒரு சிறு ஜப்பான் குடையைப் பிடித்துக்கொண்டு, கம்பியின் மீது சாமர்த்தியமாக நடந்து சபையோரை ஆச்சரியக் கடலில் மூழ்க வைத்தான். அதற்குப் பிறகு, பாலு வந்தான். ஒற்றைச் சக்கர வண்டியில் ஒய்யாரமாக வந்தான். பல வித்தைகளைச் செய்து

காட்டினன். மகாஜனங்களுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. மகாஜனங்கள், "ராஜா வரட்டும்! ராஜா வரட்டும்!" என்று, சர்க்கஸ் கம்பெனிக் கூடாரமே கிடுகிடுக்கும்படியாக கூச்சலிட்டார்கள். பாலு, முகத்தைச் சுளித்துக் கொண்டே உள்ளே போய்விட்டான்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. அதன் பிறகு, ராஜா, சிங்கத்தின் மீதேறி சிரித்துக் கொண்டே வந்தான். அவன் மேடைக்கு வந்ததும், சபையோரெல்லாம் 'தட தட' என்று கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். ஆரவாரத்தின் ஓசை ஐந்து நிமிஷங்கள் வரை ஓயவேயில்லை. ராஜா சிங்கத்தின் மீதிருந்து கீழே இறங்கினன். சபையோருக்கு, தலையைத் தாழ்த்தி ஒரு சலாம் போட்டான். அவன் ஏறிக்கொண்டு வந்த அந்தச் சிங்கமும், மண்டியிட்டு மகாஜனங்களுக்கு மரியாதை செலுத்தியது. பிறகு, அச் சிங்கத்திற்கும், ராஜாவுக்கும் பயங்கரமான சண்டை நடக்க ஆரம்பித்தது! ராஜா 'கப், கப்' என்று பாய்ந்து பாய்ந்து, அச்சிஙகத்தின் முகத்தில் சரமாரியாகக் குத்துகளைப் பொழிந்து, தள்ளினன். இதைக் கண்ட சபையேரெல்லாம், ராஜாவின் சூரத்தனத்தை வானளாவப் புகழ்ந்தார்கள்.

ராஜாவும், அந்தச் சிங்கமும் மேலும் கீழு மாகப் புரண்டு புரண்டு சண்டை செய்தார்கள். ராஜாவுக்கு மூசு மூசு என்று இளைத்தது. அச் சிங்கத்திற்கும் மூசு மூசு என்று இளைத்தது ராஜா, அச்சிங்கத்தை உருட்டித் தள்ளிவிட்டு, துள்ளி எழுந்து தூரமாக ஓடி நின்றான். பிறகு, கைவிரல்களை மடக்கிக்கொண்டு, சிங்கத்தின் மீது பாய்வதற்காக சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். கீழே விழுந்து கிடந்த சிங்கம்பயங்கரமாகஉறுமிக்கொண்டே, ராஜாவின் மீது ஒரே பாய்ச்சலாக 'ஜிவ்' என்று, பாய்ந்தது! இதையெல்லாம் வாயைப் பிளந்தபடி கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த சபையோர்கள், "ஐயோ!!!" என்று, அலறியே விட்டார்கள்! எல்லோருக் குல் திகில் பிடித்துக் கொண்டது! எல்லோ ரும் வாயைப் பிளந்தபடி, ஆச்சரியத்தோடும், அச்சத்தோடும் அப்பயங்கரக் காட்சியைப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

ராஜாவின் மீது பாய்ந்த சிங்கம், ராஜா வின்கழுத்தை 'கப்' என்று கவ்விக்கொண்டது. இதைக் கண்ட சபையோர்களுக்கு திகில் இன் னும் அதிகமாகிவிட்டது. "என்னதான் நடக்கி றது, பார்ப்போமே" என்று, மூக்கின் மேல்

விரலை வைத்தபடியே பார்த்துக்கொண்டிருந் தார்கள். இக்காட்சியை திரைமறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்த பாலு, "கடவுளே! அந்தச் சிங்கம், உண்மையாகவே ராஜாவின் கழுத்தை 'நறுக்'கென்று கடித்துப் போடாதா!" என்றெண்ணி ஏங்கினன். அவன் வஞ்சம் அவனுக்கு!

பூனை, தன் குட்டியைக் கவ்வுவதைப் போலவே சிங்கம், ராஜாவின் கழுத்தைக் கவ் விக்கொண்டிருந்தது. தனுக்காகத்தான் கவ் விக்கொண்டிருந்தது.

எல்லாம் வித்தைதானே! அம்மாடியோ? இவ்வளவும் உண்மையாக இருக்குமானல், இந் நேரம் ராஜாவின் உடல் வேறு தலைவேருகி யிருக்குமே! ராஜா, அச்சிங்கத்தினிடம் தன் கழுத்தைக் கொடுத்து விட்டு, சிறிது நேரம் 'கம்' மென்று இருந்தான். பிறகு, திடுதிப் பென்று தன் கழுத்தை வெளியில் எடுத்துக் கொண்டு, துள்ளித் தூர ஓடி வந்து விட்டான்.

சபையோரெல்லாம் "ஆஹா! சபாஷ், சிங் கக்குட்டி! சபாஷ், சிங்கக் குட்டி!" என்று கர கோஷம் செய்தார்கள். அத்துடன் அப்பயங் கரச்சண்டை முடிந்தது. "டாங், டாங்" என்று மணியடித்தது. வேறு காட்சி ஆரம்பமாகியது.

ராஜா சிரித்துக் கொண்டே மேடைக்கு ஓடினான். மேடைமீது வைக்கப் பட்டிருந்த கரும்பலகையில் சாய்ந்து கொண்டு நின்றான். இப்போது, ராஜாவின் தேகத்தில் படாது, சுற்றியுள்ள பலகையில் கூரான கத்திகளை வீசி யெறியும் காட்சி ஆரம்பமானது. அன்று வழக்கமாகக் கத்திகளை வீசி யெறியும் ஆசாமிக்கு, உடம்பு சரியில்லாததால் பாலுவுக்கே அந்த வேலை கொடுக்கப்பட்டது. பாலு பல கத்திகளை இடுப்பில் செருகிக் கொண்டு துள்ளி ஓடிவந்தான். மேடை மீது ஏறி கம்பீரமாக நின்றான். சபையோரெல்லாம் என்ன நடக்கப் போகிறதோ? என்று, ரொம்ப ரொம்ப ஆவலோடுஎதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்

"இன்னைக்கு இந்தப் பயலைக் கட்டாயம் ஒழித்துக் கட்டுவதே சரி!" என்ற வஞ்சக எண்ணத்தோடு, கத்திகளை எடுத்தான், பாலு. முதலில் ஏழெட்டுக் கத்திகளை ஒழுங்காகவே பலகையில் பாயும்படி எறிந்தான். பிறகு, ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு, குறி தவறுவது போல ராஜாவின் மார்பை நோக்கி வீசி எறிந்தான். கத்தி அவன் கையை விட்டுப் புறப்பட்டது. ராஜாவின் மார்பை நோக்கி நேராகச் சென்றது! ஆனால், அது ராஜாவின் மார்பில்

பாயவில்லை! அது, பாய்வதற்கு முன்னால், 'லபக்'கென்று ராஜா அதைக் கையில் லாகவ மாகப் பிடித்துக் கொண்டான்! உடனே, ஜனங்களெல்லாம், 'சபாஷ்! சபாஷ் ராஜா!' என்று ஆரவாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுக்குப் பாலுவின் வஞ்சக எண்ணம் எப்படித் தெரியும்! அதையும் அவர்கள் ஒரு வித்தையாகவே எண்ணிக் கைதட்டலானார்கள்.

உடனே நல்ல வேளையாக, அந்தக் காட்சி முடிந்து விட்டதற்கு அறிகுறியாக 'டாங் டாங்' என்று மணியடிக்கப் பட்டது.

அன்று இரவு பாலுவைக் கண்டபடி திட்ட ஆரம்பித்து விட்டார், சர்க்கஸ் முதலாளி. ஆனால், பாலுவோ, தனக்கு அதில் அடிக்கடி பழக்கம் இல்லாததால், கை ஆடி விட்டது என்று ஏதோ ஒரு நொண்டிச் சாக்குக் கூறி தப்பித்து விட்டான்.

இன்னொரு தடவை சர்க்கஸ் கம்பெனி, சோழபுரத்தில் முகாம் போட்டிருந்தது. அப்போது ஒரு சமயம், அந்தரத்தில் தந்திரமாக கயிற்று ஊஞ்சலில் தொங்கிக் கொண்டிருந்தான், பாலு! அவன் கைகளைப் பிடிப்பதற்காக மற்றொரு ஊஞ்சலிலிருந்து நைஸாகத்

தாவிப் பாய்ந்து வந்தான் ராஜா. பாலு,



அதுதான் சமயமென் றெண்ணி, தளுக்காக, தந்திரமாக, கை தவறி விட்டதைப்போல பாசாங்குசெய்து, ராஜாவின் கைகளைப் பிடிக்காமல் விட்டு விட்டான்! ராஜா, கையைப்பிடிக்காமல் கீழே விழுந்து அவமானப்பட வேண்டும், என்பதே பாலுவின் எண்ணம். ஆனால், பாலுவின் எண்ணம் ஈடேறவில்லை! ராஜா, பாலுவின் கை தவறியதும், அப்படியே ஒரே மூச்சாக ஒரு கரணம்

போட்டு, பக்கத்திலிருந்த மற்ெறாரு ஊஞ்சலைப் பிடித்துத் தப்பித்துக் கொண்டான்!



இப்படி எத்தனையோ நாள், எத்தனையோ தடவை தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள எவ்வளவோ தந்திரங்களை சாமர்த்தியமாகக் கையாண்டு பார்த்தான், பாலு. எந்த வகையிலும் தன் வஞ்சம் தீராமல் போகவே, இப்போது, இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கை பார்த்து விடுவதற்காக, கட்டிலின் மீது, கண்களை

மூடிக்கொண்டு, தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான்.

பாலு, என்ன நினைத்தானே? ஏது நினைத்தானே? அவன் மனத்தில் என்ன குருட்டு யோசனை உதித்ததோ? அவன், 'சடார்' என்று, கட்டிலை விட்டு எழுந்தான்; போனான். தன்னுடைய டிரங்குப் பெட்டியைத் திறந்தான். என்னவோ, இரண்டு மூன்று ஆயுதங்களை எடுத்து, ஜாக்கிரதையாக இடுப்பில் செருகிக் கொண்டான். கூடாரத்தை விட்டு வெளியே வந்தான். அப்போது பக்கத்திலிருந்த மானேஜரின் கூடாரத்திலிருந்த கடிகாரத்தில் 'டங், டங்' என்று, இரண்டு மணி அடித்தது. கொஞ்ச தூரத்திலிருந்த சர்க்கஸ் கம்பெனிக் குதிரை இரண்டு மூன்று தரம் கனைத்தது. பாலு சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணேம்!

வானத்து நிலாவை, கன்னங்கரேலென்ற கருமேகக் கூட்டங்கள் மறைத்துக் கொண்டிருந்தன. எங்கும் ஒரே இருள்! அந்தக் காரிருளில், பாலு, எங்கேயோ அவசர அவசரமாக நடந்தான். நடந்துகொண்டே இருந்தான்.

கார்த்திகை மாதத்துப் பனி 'பிசு பிசு' என்று தூறிக்கொண்டிருந்தது. 'ஜிலு ஜிலு'

என்று குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. பாலாற்றுப் பாலத்திற்குக் கொஞ்ச தூரத்திலுள்ள கைகாட்டி மரத்தின் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. ரயில் பாதையின் இருபக்கங்களிலும் ஓங்கி வளர்ந்த பெரிய பெரிய மரங்களும், செடிகளும், கொடிகளும், செங்குத்தாக உயர்ந்து நிற்கும் கரும் பாறைகளும் பார்க்கப் பயங்கரமாகக் காட்சியளித்தன.

பயங்கரமான அந்த இருளில் அஞ்சா நெஞ்சத்துடன் தன்னந் தனியாக "எது வந்தாலும் சரி! இன்னைக்கி அவனுவது ஒழியணும்; இல்லே, நானுவது ஒழியணும்' என்ற உறுதியான வைராக்கியத்துடன், அப்படியும், இப்படியுமாக அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே, அந்த ரயில் பாதையின் வழியாக, வேகமாக நடந்து போய்க்கொண்டிருந்தான், பாலு. பாலாற்றுப் பாலத்தருகில் வந்தான்; நின்றான். சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணோம்! அவன் கண்களுக்கு யாரும் தென்படவில்லை! அந்த மை யிருட்டில் யார் இருந்தால்தான் தெரியப் போகிறது! பாலு தண்டவாளங்களின் அருகில் உட்கார்ந்தான். மீண்டும் ஒரு முறை சுற்றி

வளைத்துப் பார்த்துவிட்டு, தன் கால் சட்டைப் பையில் இருந்த சிறு டார்ச் விளக்கை எடுத்தான். பட்டனைத் தட்டினான். தண்டவாளங்களுக்கிடையே வெளிச்சத்தைக் காட்டி, தண்டவாளத்தின் இணைப்புகளை ஒரு முறைக்கு இரு முறையாக நன்றாகப் பார்த்துக் கொண்டான். பிறகு விளக்கை அணைத்து மறுபடியும் பையில் வைத்துக்கொண்டான்.

மெதுவாக இடுப்பில் செருகிக் கொண்டிருந்த ஆயுதங்களை எடுத்தான். "இந்தவழியாக வரப் போகிற போட் மெயிலிலேதானே, ராஜா வரப்போகிறாரு. வரட்டும்! வந்து ரயிலோடு விழுந்து நொறுங்கிச் சாகட்டும்!" என்று முணுமுணுத்துக் கொண்டே இணைப்பிலுள்ள திருகுகளைக் கழற்றினான். சில நிமிஷங்களுக்குள் ஒரு பக்கத்துத் தண்டவாளக் கம்பியை நகர்த்திவிட்டான்! பிறகு அவசர அவசரமாக கீழே கிடந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, பாலத்திற்குக்கொஞ்ச தூரத்திலுள்ள வேலங்காட்டை நோக்கி வேகமாக ஓடினான். அங்கு ஓரிடத்தில் செடியும் கொடியுமாக வளர்ந்து கிடந்த ஒரு புதரில் போய் ஒளிந்து கொண்டு, பாலத்தின் தெற்குத் திசையை ஆவலோடு எதிர் பார்க்க ஆரம்பித்தான்.

'போட் மெயில் வரும். அதில் ராஜா தூங்கி வழிந்து கொண்டே வருவான். நாம் தண்டவாளத்தைப் பெயர்த்து வைத்திருப் பதனுல் போட்மெயில் கவிழ்ந்து விழுந்து நொறுங்கும்! அதோடு ராஜாவும், தீர்ந்து போவான்; நமது வஞ்சமும் தீர்ந்து போகும்! நமக்கு நம் சர்க்கஸ் கம்பெனியில் முன் போல வே, நல்ல செல்வாக்கும், அதிகச் சம்பளமும், தாராளமாகக் கிடைக்கும். நம் பாடு யோகந் தான்!' இப்படியாக பாலுவின் மனம் எண்ணி எண்ணி எக்காளமிட்டுக் கொண்டிருந்தது.

மணி மூன்று ஆயிற்று. மூன்றரையும் ஆயிற்று. இன்னும் அரை மணி நேரந்தான் இருக்கிறது, போட்மெயில் வருவதற்கு.

பாலு சிறிது நேரம் ஏதோ யோசித்தான். அவன் உள்ளத்திலே திடுதிப்பென்று ஓர் எண் ணம் ஓடி வந்து புகுந்து கொண்டது. அது அவன் உள்ளத்தை ஒரு கலக்குக் கலக்கி விட் டது. அவனை அப்படியே ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது! உடனே பாலுவிற்கு முகம் 'குப்' என்று வியர்த்தது!

"அம்மம்மா! என்ன பயங்கரமான வேலை செய்யத் துணிந்து விட்டேன்! என்ன படு பாவமான வேலை செய்யத்

துணிந்து விட்டேன்! ஐயோ! ராஜா ஒருவனைக் கொல்லுவதற்காக வேண்டி, அந்த ரயிலில் வரும் அத்தனை ஜனங்களையுமா கொல்ல வேண்டும்! ஐயோ! நினைக்கவே பயம்மாயிருக்கே! அந்த ரயிலில் நமக்குத் தெரிந்த அண்ணன் தம்பிகள் எத்தனைபேர்வருகிறார்களோ! ஐயோ! என் தலை சுழலுகிறதே!'' என்று நெஞ்சு பதறவே இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு, அப்புதரிலேயே சோர்ந்து உட்கார்ந்து விட்டான்.

அப்போது, எங்கிருந்தோ, "குக்கூ குக்கூ கூகூ'' என்று போட் மெயிலின் சப்தம், 'ஜில்' லென்று வீசும் பனிக்காற்றில் மிதந்து வந்தது. போட் மெயிலின் கூச்சலைக் கேட்டதும், பாலு என்ன நினைத்தானோ? அவன் 'குபுக்' என்று புதரைவிட்டு வெளியே வந்தான். பாலத்தை நோக்கிப் பஞ்சாய்ப் பறந்தோடினான். தான் பெயர்த்து வைத்திருந்த தண்டவாளக் கம்பிகளுக்குக் கொஞ்ச தூரத்தில் ஓடிப்போய் நின்றான்; டார்ச் விளக்கை எடுத்தான்; பட்டனைத் தட்டி எரியவைத்துக் கொண்டான். போட் மெயில் வருவதைப் பார்த்துக் கொண்டே நின்றான். அப்போது அவனுடைய உள்ளம், நீரை விட்டுக் கரையில் துள்ளி விழுந்த மீனைப்போல

'படபட' வென அடித்துக் கொண்டிருந்தது. அவன் சட்டை முழுதும், வியர்வையால் தெப்பமாக நனைந்து கிடந்தது.

தூரத்திலுள்ள மலையடிவாரத்தில் சின்னஞ் சிறுசாகத் தெரிந்த வெளிச்சத்தைக் கண்டதும், பாலு, தன் கையிலிருந்த டார்ச் விளக்கை உயரத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, அப்படியும் இப்படியுமாக அசைத்தசைத்து 'சிக்னல்' காட்ட ஆரம்பித்தான். மலையடிவாரத்தில் தெரிந்த அச் சிறு வெளிச்சம் வரவரப் பெரியதாகிக் கொண்டே வந்தது. அது, போட் மெயிலின் முன் பக்கத்திலிருக்கும் பெரிய ஸர்ச்லைட்டுத்தான். போட் மெயில் 'கிஜு. கிஜு' என்று, சப்தமிட்டுக் கொண்டே காற்றாய்ப் பறந்தோடி வந்து கொண்டிருந்தது. பாலு, பட படக்கும் உள்ளத்துடன், டார்ச் விளக்கை அசைத்தசைத்து 'சிக்னல்' காண்பித்துக் கொண்டே இருந்தான்.

பாலுவின் டார்ச் விளக்கு சிக்னலை, ரயில் டிரைவர் பார்க்காமலில்லை. அவன் எப்படியோ பார்த்துவிட்டான்! ஆனாலும், அந்தப் பாழாய்ப்போன டிரைவர், ரயிலை நிறுத்தினானா? அதுதான் கிடையாது! உம், ஹூம்! அந்தப்

பயங் கொள்ளி டிரைவர் ரயிலை நிறுத்தவே இல்லை! அவன் "யாரோ மலைக் கள்ளர்கள் தான், தந்திரமாக விளக்கைக் காண்பித்து, ரயிலை நிறுத்திக் கொள்ளையடிக்கப் பார்க்கிறார் கள்" என்று, விபரீதமாக எண்ணிக்கொண்டு விசையை முடுக்கி, ரயிலை இன்னும் வேகம் வேகமாக ஓட்ட ஆரம்பித்தான். போட்மெயில் பறந்தது! பாலுவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.! ஏது செய்வதென்றே தெரிய வில்லை! பாலு பதறினன்; கதறினன். 'ஐயோ! ஆபத்து!! ஆபத்து!!! ரயிலை நிறுத்துங் கள்!!! நிறுத்துங்கள்!!!!' என்று, தொண் டை கிழியக் கத்தினன். குதியாய்க் குதித்தான்.

உம், ஹூம்! பாலுவின் முயற்சி பலிக்க வில்லை. போட்மெயில், பாலுவை நெருங்கி வந்துவிட்டது. பாலு ஒரே தாவில் தண்ட வாளத்தை விட்டுப்பக்கத்தில் குதித்து ஒதுங்கி நின்ருன். பின்னே? அவன் அப்படி ஒதுங்கி நிற்காவிட்டால், அவனே "குளோஸ்" ஆகிவிடு வானே! போட்மெயில் பாலுவைத் தாண்டி ஓடியது. பாலு, பதுமையாய் நின்று பார்த்துக் கொண்டே இருந்தான். இனி அவனல் என்ன செய்யமுடியும்? அவன் மரமாக நின்று விட் டான். போட்மெயில் ஓடியது. பாலத்தின் மீது

ஓடியது. ரொம்ப வேகமாக ஓடியது. பாலத்தைக் கடந்து ஓடியே போய்விட்டது! இதைக் கண்ட பாலு 'ஆ!!!' என்று, ஆச்சரியம் தாளாமல் கூவியேவிட்டான். அவன் கையிலிருந்த டார்ச் விளக்கு, அவனையும் அறியாமல் நழுவி, கீழே விழுந்தது. அவன் நினைத்தபடி போட்மெயில் கவிழவுமில்லை; கவிழ்ந்து நொறுங்கவுமில்லை; ராஜா சாகவுமில்லை! ஆபத்து எதுவுமின்றி ஓடி மறைந்து விட்டது, போட்மெயில்! எப்படி என்கிறீர்களா?

போட்மெயில், பாலு பெயர்த்து வைத்த தண்டவாளப் பாதையில் ஓடவேயில்லை. அது பக்கத்துப் பாதையில் ஓடியது. இல்லாவிட்டால்—பாலு, தண்டவாளத்தைப் பெயர்த்து வைத்திருந்த பாதையின் மீது போயிருந்தால்? நிச்சயம், போட்மெயில் மண்ணைக் கவ்வி இருக்குமே! 'போட்மெயில் பக்கத்திலிருந்த தண்டவாளத்தில் சென்று தப்பித்துக் கொண்டது என்பதைத் தெரிந்துகொள்ள பாலுவிற்கு வெகு நேரம் ஆகவில்லை! அவனுக்கு அப்போதே 'பளிச்' என்று தெரிந்துவிட்டது. பாலுவிற்கு அப்போதுதான் உயிர் போய் உயிர் வந்த மாதிரி இருந்தது.

பாலு, "அப்பாடி!" என்று, தன் மார்பின் மீது கையை வைத்து, நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"சரி, இனி நாம் இங்கே இருந்தால் நமக்கு ஆபத்துத்தான்" என்று முனகிக் கொண்டே கீழே விழுந்து கிடந்த டார்ச் விளக்கை எடுத்து அணைத்து ஜேபியில் போட்டுக் கொண்டு, சர்க்கஸ் கம்பெனியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

பாலு, ஓர் அடி எடுத்து வைத்தான். அவ்வளவுதான்! பின்னுலிருந்து யாரோ, பாலுவின் கழுத்தை இரும்புப் பிடியாகப் பிடித்தார்கள். பாலு, "ஐயோ! அம்மா!" என்று அலறிக் கொண்டே திரும்பினுன். பார்த்தான். பாலுவின் கழுத்தைப் பிடித்துக் கொண்டிருந்தவர் வேறு யாருமில்லை. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தான்! அவருடன் கூட நாலைந்து பேர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்!

"டேய், ஆள் கத்தரிக்காய் மாதிரி இருக்கிருய். பெரிய பெரிய வேலையெல்லாம் செய்து விட்டாயே! போயும் போயும் 'லோகல்' கூட்ஸ் தண்டவளத்தைப் பெயர்த்தாயே. போட்மெயில் போன பாதையையே பெயர்த்திருந்தால் இன்னேரம் என்ன கதி ஆகி

யிருக்கும்! எவ்வளவு பேர் செத்து மடிந்திருப்பார்கள்! உம்,'' என்று உறுமிக்கொண்டே, பாலுவிற்கு இரண்டு அறை கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

"ஐயாவுக்கு இன்னைக்கு நல்ல அதிஷ்ட காலம்தான்! கட்டாயம் அஞ்சு வருசமாச்சும் ஜெயில் சாப்பாடு கிடைக்கும்'' என்ருன், போலீஸ்காரர்களில் ஒருவன்.

அப்போது அந்தப் போலீஸ் கூட்டத்துடன் நின்ற பக்கத்துக் கிராமத்துக் கிழவன் ஒருவன் "அடேயப்பா, பெரிய ஆபத்து உண்டாக்கப் பார்த்தியே! நீ ரயில் பாதையிலே விளக்கடிச்சுப் பார்த்தவுடனே, ஏதோ ஆபத்தான, வேலைதான் செய்யப்போருயிண்ணு நினைச்சேன். அப்பவே உன் கழுத்தைத் திருகியிருப்பேன். கையிலே கத்தி, துப்பாக்கி ஏதாவது வச்சிருந்தால் என் உயிருக்கும் உலை வச்சிடுவியேண்ணு பயந்துதான் வேக வேகமாக ஓடி இந்தப் போலிஸ்காரங்களை அழைச்சு வந்தேன். நல்ல வேளை. எந்தச்சாமி புண்ணியத்திலேயோ, எல்லாரும் தப்பிச்சிட்டாங்க.'' என்று பாலுவைப் பார்த்துக் கூறினன்.

"அதுசரி, இப்போ இந்த நாசகாரப் பயலைச் சும்மா விடப்படாது......உம். இவனை இழுத்துக்கிட்டு வாங்கடா" என்று உத்தரவு போட்டார், இன்ஸ்பெக்டர். பாலுவின் இரு கைகளையும் இரு போலீஸ்காரர்கள் பிடித்து இழுத்துக்கொண்டே போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

* * * *

மூன்ருவது நாள், பாலுவின் விசாரணை நடந்தது. பாலு, தன்னைப்பற்றியோ, தன் சர்க்கஸ் கம்பெனியைப் பற்றியோ ஒரு துண்டு விஷயத்தைக்கூடச் சொல்லவில்லை. 'எனக்கு யாருமே கிடையாது. நான் ஒரு அனுதை' என்று மட்டும் சொல்லி வைத்தான். பாலுவிற்குக் கிடைத்தது, மூன்று வருஷக் கடுங் காவல் தண்டனை! அதோடு, 'தேசத்துரோகி' என்ற பட்டமும் கிடைத்தது.

* * * *

நாட்கள் பல சேர்ந்து மாதங்களாயின. மாதங்கள் பல சேர்ந்து மூன்று வருஷங்களும் ஆகி விட்டன!

அப்போது, சர்க்கஸ் கம்பெனி சென்னையிலே முகாம் போட்டிருந்தது (எங்கே என்று கேட்டு விடாதீர்கள்!)

பொங்கல் திருநாள்! காலை மணி 5 இருக்கும். சர்க்கஸ் கம்பெனி கூடாரத்தினுள் கயிற்றுக் கட்டிலின் மீது தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தான், ராஜா. கூடாரத்தினுள் அமைதி நிலவியிருந்தது. அமைதி நிலவிய அந்த நேரத்திலே பரிதாபமும், இரக்கமும் நிறைந்த தழுதழுத்த ஒரு குரல்—

"ராஜா!"

ராஜா எழுந்திருக்கவில்லை. அவன் தூங்கிக் கொண்டே இருந்தான்.

"ராஜா... !"

மறுபடியும் சிறிது உரக்கவே கேட்டது, அந்தக் குரல். அப்போதும் ராஜா அசையவில்லை.

"ராஜா.........!"—குரல் இன்னும் சிறிது பலமாகக் கேட்டது. ராஜா திடுக்கிட்டு விழித்தெழுந்தான். கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டு, கூடாரத்தின் வாசலைப் பார்த்தான். அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை! ராஜா, அப்படியே அச்சடித்த பதுமையைப் போல் ஆடாமல் அசையாமல், வாசலில் நிற்கும் அந்த உருவத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான். வாசலில் நின்ற அந்த உருவமும், ராஜாவை வைத்தகண் வாங்

காமல், இரக்கத்தோடு மௌனமாகப் பார்த்துக் கொண்டே நின்றது.

"பாலு!!!"

அமைதியைக் கலைத்துக் கொண்டு வெளி வந்த ராஜாவின் குரல் அது!

வாசலில் சிலையாய் நின்று கொண்டிருந்த பாலு, ஓடோடியும் வந்தான். ராஜாவின் கால்களைப் பிடித்துக் கொண்டு, "ராஜா! தயவு செய்து என்னை மன்னித்து விடு! நான் பெரிய துரோகி! நய வஞ்சகன்! பொறாமைக் காரன்! உன்னுடைய உழைப்பின் மேன்மையைக் கண்டு பொறாமைப்பட்டேன். உனக்குத் தீங்கு செய்ய நினைத்தேன். கடவுள் எனக்கே தீங்கு செய்து விட்டார்! என்னுடைய பொறாமை எண்ணம், என்னை ஜெயிலுக்கே அனுப்பி விட்டது! எனக்குப் புத்தி வந்தது! எனக்குப் புத்தி வந்தது! ராஜா! தயவு செய்து என்னை மன்னித்து விடு!" என்று, கதறிக் கதறி அழுதான்.

ராஜாவுக்கு இதைக் கேட்டதும் ஒரே ஆச்சரியமாக இருந்தது.

"பாலு! அழாதேடா. எழுந்திரு. என்ன! இப்படி ஆளே அடையாளம் தெரியாமல்

போய்விட்டாயே! என்ன விஷயம்? 3 வருஷ மாகவே உன்னைக் காணவில்லையே! நீ என்ன சொல்லுகிறாய் என்பதும் புரியவில்லையே? பதட்டமில்லாமல் சொல்லு." என்றான் ராஜா. பாலு ஆதியிலிருந்து நடந்தவற்றை யெல்லாம் ஒன்றுவிடாமல் சொன்னான். அதைக் கேட்கக் கேட்க ராஜாவின் கண்கள் கலங்கின.

"பாலு, நடந்ததைப்பற்றிக் கவலைப் படாதே. ஏதோ உன் கஷ்டகாலம் அப்படி யாய் விட்டது. கண்ணைத் துடை. வா, முதலாளி யிடம் போவோம்" என்று நெஞ்சு தழுதழுக் கக் கூறினான் ராஜா.

"முதலாளியிடமா, ராஜா! நான் எப் படிடா அந்தத் தங்கமான மனுஷர் முகத்திலே விழிப்பேன்! அவர் என்னை மன்னிப்பாரா?" என்று நெஞ்சு தடுமாறக் கதறினான், பாலு.

"ராஜாவே உன்னை மன்னிச்சுட்ட பிறகு, நான் வேறே மன்னிக்கணுமா! என்னவோ, நடந்தது நடந்து போச்சு. இனிமேலாவது, அன்பாய், அண்ணன், தமபியைப்போல இருங்க" என்று இவ்வளவு நேரமும், கூடாரத் தின் ஜன்னல் வழியாக நடந்த பேச்சுக்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சர்க்கஸ் கம் பெனி முதலாளி, அன்பாக, பெருந்தன்மை

யோடு சொல்லிக் கொண்டே, அங்கிருந்து நடந்தார்.

பாலுவும், ராஜாவும் கூடாரத்தை விட்டு வெளியே ஓடி வந்தார்கள்; பார்த்தார்கள். கொஞ்ச தூரத்தில், முதலாளியும், மானேஜரும், பொறுமையோடு நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

பாலு அவர்களைப் பார்த்துக் கண்ணீர் விட்டான். பாலு அழுவதை ராஜா பார்த்தான். அவனுக்கு மனசை என்னவோ செய்தது.

"பாலு, இன்னும் ஏண்டா அழறே? கொஞ்சம் சிரி" என்று சிரித்துக்கொண்டே சொன்னான், ராஜா.

ராஜா சிரிக்கும்போது, பாலுவால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. பாலுவும் சிரித்தான். ராஜாவும் சிரித்தான். கிழக்கு அடிவானத்தில் இருளை விழுங்கி ஏப்பம் விட்ட காலைச் சூரியனும், அவர்களைப் பார்த்துச் சிரித்தான்.

மங்களம்.

Rajan Electric Press. Madras-1.

# குழந்தை வெளியீடுகள்

1. பாட்டிக்குப் போட்டி
2. நல்ல நண்பர்கள்
3. கட்டைவிரல் கிட்டு
4. ராணி பேசினுள்
5. மனோஹரன்
6. மஹேந்திர ஜாலம்
7. கண்ணுன கண்ணன்
8. குதிரைச் சவாரி
9. தைரியசாலி
10. சுகுமார்
11. சபாஷ், மணி!
12. குருவியின் சாபம்
13. அபூர்வ வித்தை
14. ஈசாப் கதைப்பாடல்கள்
15. காந்திமதி

(ஒவ்வொன்றும் விலை அணு 2)


அடுத்த புத்தகம்
என் தம்பி
பூவண்ணன்
எழுதியது
விலை 2 அணா
குழந்தைப் பதிப்பகம், சென்னை, 6.